# இருவார சிப்பாயின் சிந்தனை

2025
நவம்பர்
15 - 30
பாகம்
LIV

ஊடக மற்றும் உளவியல் செயற்பாட்டு பணிப்பகத்தின் வெளியீடு



# மாறும் உலகம்

வெள்ளத்தில் அல்லுண்ட இலை போல
வாழ்க்கை முடிவில்
இன்றைய மணம் நாளை இல்லை
உலகில் எதுவும் நிலையில்லை

மலரும் பூ உதிரும், வைர மரம் சாயும்,
இளமை மங்கி முதுமை வரும்
ஒவ்வொரு பிணைப்பும் பிரியும் தருணமுண்டு,
மாற்றம் நிச்சயம் அதுவே இவ்வுலகின் நியதி

இவ்வுலகம், மனதில் தோன்றும் கனவு போல
கண் மூடும் தருணத்தில் கரையும் நீர்க்குமிழி போல
நினைவில் வைப்பது துயரமே மகிழ்ச்சியில்லை
மறப்பதுவே சுதந்திர நிம்மதிக்கு வழி வகுக்கும்

**கோப்ரல் இசுர மதுசங்க டபிள்யூகே**
12வது **கெஹேப**



# தனிமை

வெற்றி தோல்வி,
காதல் பிரிவின் நடுவில்,
துயரமான ஊசலாட்டத்தின்
இறுதியில் மனிதர்கள்
அமைதி கொள்ளும்
அன்பான தங்கும் இடம்
தனிமை மட்டுமே...

கோப்ரல் பின்சாரிக்கா டபிள்யூஏபீ
11 வது இசப



# சிப்பாயின் வாழ்க்கை

வீட்டைவிட்டு நாட்டுக்காக
நிற்கும் வீரன்,
வெயிலும் மழையிலும்
உறுதியே தோழன்.
உயிர் துறந்தாலும்
புன்னகை தளராது,
சிப்பாயின் வாழ்க்கை
தியாகம் மாறாது.

**கோப்ரல் ஷியாமலா டி**
**2 வது (தொ) இஇமப**



# நேஹாவுக்கு அன்புடன்

சின்ன இளவரசியே,
பிஞ்சி கை கால்களை அசைந்தபடி
கருவில் விளையாடிய அந்த நாட்களில்
முதல் உணர்வை தந்தாய்
அழகான ஒன்பது மாதங்கள்
விதி கொடியதாயினும்
அழியாத அன்பு இன்னும் என் இதயத்தில்
ஒளி காண முடியாத உனக்கே
என் நிலையான பாசம் என்றும்

லா/கோ ஜயதுங்க கேஜிபிசி
1 வது இஇமப

# படையணியின் 33 வது ஆண்டுவிழா

எட்டாம் சிங்கக் கொடி நிழலில் ஒன்றுபட்டோம்,
மாவீரர் கதை புத்தக நினைவுகள் மனதில் தாங்கும்
சிங்கத்தின் வலிமை இன்றும் உதிரத்தில் ஓடுகிறது,
சிங்க குடும்பத்தின் பெருமைமிகு நாமத்தை என்றும்
காப்போம்
உயிர் ஈந்த மாவீரர்கள், இன்றும் உள்ளத்தில்,
உடலை அர்ப்பணித்த அசைக்க முடியாத வீரர்கள்
இன்றும் வீர ஆத்மா இலங்கை நிலத்தில் நின்றுகாக்கிறது
கல்வெட்டாய் அழியாது அவர்கள் பெயர் நம் இதயத்தில்
அர்ப்பணித்த உயிரால் போர்களம் இனி இல்லை வீரனே
அமைதி மலர்கையில் உன் மணம் நம் இதயத்தில்
கண்ணீரை மறைத்து இலங்கை தாய் புன்னகைக்கிறாள்
இன்றும் உன் இரத்தம் மண்ணுக்கடியில் புதைந்துண்டு
எட்டாம் கொடி வானில் பெருமையுடன் ஆடுகிறது,
தியாக வீரர் நினைவுகள் அசைவில் நெஞ்சை தொடுகிறது.
இன்று முப்பத்திமூன்று ஆண்டுகள் கடந்த பாதையில்,
நெஞ்சார்ந்த ஆசிகளுடன் மோட்சம் கிட்டட்டும்

**சார்ஜன் உமேஷ் குமார ஆர்சி**
**8 வது இலங்கை சிங்க படையணி**

# இருவார சிப்பாயின் சிந்தனை

ஊடக பணிப்பகத்தின் வெளியீடு

இராணுவ ஊடக பணிப்பகம், இராணுவ தலைமையகம் | www.army.lk | 011 2076967